**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 19/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-4/PW-4 | Village:குறிச்சிமலை |
| Name | : சுரேஷ் | Age :27 |
| Father's/Husband's Name | : தங்கராசு | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/09/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது குறிச்சி மலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் புகைப்படகலைஞராக வேலை செய்து வருகிறேன். எதிரிகள் முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோரை எனக்கு தெரியும். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை எனக்கு தெரியும். 08/06/2019 ம் தேதி மாலை 03.00 மணியளவில் வேலை விசயமாக புழுதிக்குடி அஸ்லாம் காலேஜ் அருகில் சென்றுகொண்டிருந்தபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. நான் இறங்கி சென்று பார்த்தபோது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் வெட்டுக்காயத்துடன் இருந்தனர். அந்த காயத்திற்கு காரணமானவர்கள் யாரென்று விசாரித்தபோது முருகன், கரிகாலன் மற்றும் முத்துகிருஷ்ணன் என்று கூறினார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ நாங்கள் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 19/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-3/PW-3 | Village:குறிச்சிமலை |
| Name | : ராஜேஷ் | Age :26 |
| Father's/Husband's Name | : ராஜா | Taluk : |
| Nationality | : Indian | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/09/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது குறிச்சி மலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோரை எனக்கு தெரியும். 08/06/2019 ம் தேதி மாலை 04.00 மணியளவில் வேலை விசயமாக புழுதிக்குடி சென்றிருந்தேன். புழுதிக்குடி அய்யாகோவில் வளைவு அருகே சென்றபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் வெட்டுக்காயத்துடன் இருந்தனர். கரிகாலன் அரிவாளுடன் நின்றிருந்தார். முருகன் கட்டையுடன் நின்று கொண்டிருந்தார். அதனை பார்த்துவிட்டு எனது நண்பர் சுரேஷ்க்கு தகவல் சொன்னேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ சிகிச்சைக்காக திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நாங்கள் அரிவாளையும், வீடியோ பதிவையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 19/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-2/PW-2 | Village:குறிச்சிமலை |
| Name | : ஹரிஹரன் | Age :22 |
| Father's/Husband's Name | : பாண்டியன் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/09/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது குறிச்சி மலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். எதிரிகள் முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோரை எனக்கு தெரியும். 08/06/2019 ம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில் நானும் அ.சா.1ம் குறிச்சி மலையில் இருந்து திருப்பனந்தாள் சென்றோம். பிராமணவிடங்கல் அருகில் சென்றபோது அங்கு முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோர் என்னை வழிமறித்து, எங்களை மிரட்டினார்கள். அ.சா.1க்கும் அவர்களுக்கும் இடையே முன்விரோம் இருந்துள்ளது. அது பற்றி எனக்கு தெரியவில்லை. எங்களை மிரட்டி புழுதிக்குடிக்கு அழைத்து சென்றார்கள். அ.சா.1ஐ பார்த்து அவர்கள் உனக்கும் எனக்கும் பிரச்சனை இருக்கும்போது ஏன் இங்கு வந்தாய் என்று மிரட்டினார்கள். கரிகாலன் மற்றும் முத்துகிருஷ்ணன் ஆகியோர் அரிவாளால் அ.சா.1ஐ வெட்டினார்கள். வெட்டியதில் அ.சா.1ன் இடது முன்கையில் வெட்டு

விழுந்தது. நான் தடுத்ததில் எனக்கு இடது கையில் வெட்டு விழுந்தது. அங்கு அருகில் இருந்தவர்கள் வந்ததால் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டார்கள். எங்களை சிகிச்சைக்காக திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு அங்கிருந்த நண்பர்கள் அழைத்து சென்றார்கள். நாங்கள் அரிவாளையும், வீடியோ பதிவையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமை யியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 19/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village:குறிச்சிமலை |
| Name | : ராஜவேல் | Age :24 |
| Father's/Husband's Name | : மணி | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 21/09/2022**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.கௌசல்யாதேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது குறிச்சி மலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோரை எனக்கு தெரியும். 08/06/2019 ம் தேதி மதியம் 3-4 மணிக்குள் நான் எனது தம்பி ஹரிஹரனுடன் வீட்டில் இருந்து திருப்பனந்தாள் சென்றபோது, புழுதிக்குடி அருகில் சென்றபோது அங்கு முருகன், கரிகாலன், முத்துகிருஷ்ணன் ஆகியோர் என்னை வழிமறித்து, என்னை போர்செட்டுக்கு அருகில் அழைத்து சென்று கரிகாலன் என்பவர் என்னை குச்சியால் அடித்தார். முருகன் என்பவர் என்னை அரிவாளால் வெட்ட வந்தார்.. அதை ஹரிஹரன் தடுத்தபோது, அவருக்கு வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. மேலும் முருகன் எனது இடது முன்கையில் அரிவாளால் வெட்டினார். கீழே விழுந்த அரிவாளை எடுத்து இதற்கு பிறகு என்னிடம் வைத்துக்கொண்டால் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அங்கு வந்த எனது தெருக்கார பசங்க என்னை

திருவிடைமருதூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு நான் முதலுதவி சிகிச்சை செய்து கொண்டு திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்று புகார் மனுவினை கொடுத்தேன். நான் அரிவாளையும், வீடியோ பதிவையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் குச்சியைத்தான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. இந்த குச்சியை ஒப்படைக்கவில்லை. வேறு குச்சியை ஒப்படைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி புகார் மனுஅ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**